அதிமுகவின் பெயர், கொடி, சின்னம் பயன்படுத்த விதிக்கப்பட்ட

தடையை எதிர்த்து ஓ.பன்னீர் செல்வம் மேல்முறையீடு

● சென்னை

அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் அகியவற்றை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மேல் முறையீட்டு மனு சென்னை உயர்நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வில் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) விசாரணைக்கு வருகிறது.

அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகிய வற்றை பயன்படுத்த, அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஓ.பன்னீர் செல்வத்துக்கு தடை விதிக்கக் கோரி பொதுச் செயலாளர் பழனிசாமி சார்பில் கடந்தாண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, அதிமுகவின் பெயர், கொடி, சின்னம், லெட்டர் பேட் ஆகிய வற்றை பயன்படுத்த ஓ.பன்னீர் செல்வத்துக்கு நிரந்தர தடை விதித்து கடந்த 18-ம் தேதி உத்தர விட்டார். இந்த உத்தரவை எதிர்த்து பன்னீர்செல்வம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மேல் முறையீட்டு மனுவில், ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதியாகி விட்டதா? இல்லையா? என்பது குறித்து நிலுவையில் உள்ள மூல வழக்கில் தான் முடிவு செய்ய முடியும் என உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

42 ஆண்டுகளாக அதிமுகவின் அடிப்படை தொண்டர், முதல்வர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்த தனக்கு, கொடி, சின்னம் உள்ளிட்டவற்றை பயன்படுத்த தடை விதித்து, ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடி, சின்னம் உள்ளிட்டவற்றை பயன்படுத்துவதால் பிரச்சினை ஏற்படுவதாக பொது மக்களோ அல்லது கட்சியின் தொண்டர்களோ புகார் அளிக்காத நிலையில், பழனிசாமி தனிப்பட்ட முறையில் மனுத்தாக்கல் செய்ததாக மேல் முறையீட்டு மனுவில் கூறியுள்ளார்.

மேலும், அதிமுகவின் பொதுச் செயலாளராக பழனிசாமியை தேர்தல் ஆணையம் முழுமையாக அங்கீகரிக்கவில்லை எனவும் இரண்டு விதமான கட்சி விதிகளை தேர்தல் ஆணையம் இணைய தளத்தில் பதிவேற்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமெனவும் மேல் முறையீட்டு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன் மற்றும் ஆர்.சக்திவேல் அமர்வில் நாளை மறுநாள் (திங்கட்கிழமை) நான்காவது வழக்காக விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

விழுப்புரம் மக்களவைத் தொகுதியில்

சுயேச்சை வேட்பாளர் மனுத்தாக்கல்

● விழுப்புரம்

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், வேட்பு மனுத்தாக்கல் மார்ச் 20-ம் தேதி தொடங்கியது. விழுப்புரம் மாவட்டத்தில் முதல் இரு நாட்களில் யாரும் வேட்பு மனுத்தாக்கல் செய்யவில்லை.

விழுப்புரம் தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் ரவிக்குமார், அதிமுக கூட்டணியில் அதிமுக மாவட்ட மாணவரணி செயலாளர் பாக்யராஜ், பாஜக கூட்டணியில் பாமகவைச் சேர்ந்த முரளிசங்கர் ஆகியோர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் இதுவரையில் மனுத்தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் நேற்று முற்பகல் 11 மணிக்கு மனுத்தாக்கல் தொடங்கியது. கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டம், பாண்டூர் புதுகாலனியைச் சேர்ந்த அரசன் (72) என்பவர் நேற்று தேர்தல் நடத்தும் அலுவலர் பழனியிடம் தனது மனுவைத் தாக்கல் செய்தார்.

↑ விழுப்புரம் மாவட்ட தேர்தல் அலுவலர் பழனியிடம் சுயேச்சை வேட்பாளர் அரசன் மனுத்தாக்கல் செய்தார்.

இவர், ஏற்கெனவே மக்களவைத் தேர்தலில் 4 முறையும், சட்டப்பேரவைத் தேர்தலில் 4 முறையும், ஊராட்சித் தலைவர் பதவிக்கு 4 முறையும், 18-வது வார்டு மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் பதவிக்கு ஒரு முறையும் மனுத்தாக்கல் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாரதா கங்காதரன் கல்லூரியில் பெண் உரிமை பயிற்சிப் பட்டறை

● புதுச்சேரி

'இந்தியாவில் பெண்களின் உரிமைகள்' என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய பயிற்சிப் பட்டறை புதுச்சேரி சாரதா கங்காதரன் கல்லூரியின் பாலியல் துன்புறுத்தல் தடுப்புத் துறையால் நடத்தப்பட்டது.

புதுச்சேரியைச் சார்ந்த பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் இருந்து 150-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சியை கல்லூரியின் துணைத் தலைவர் முனைவர் சு. பழனி ராஜா குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுடெல்லி பல்கலைக்கழக மானியக் குழு உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். பஞ்சநாதன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

➡ சாரதா கங்காதரன் கல்லூரியில் நடந்த 'இந்தியாவில் பெண்களின் உரிமைகள்' தேசிய பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற முக்கியஸ்தர்கள்.

தொடர்ந்து புதுச்சேரியின் முதன்மை மாவட்ட நீதிபதி ராஜசேகர் ஒவ்வொரு குடிமகனும் தெரிந்து கொள்ள வேண்டிய மனித உரிமைகள் மற்றும் அடிப்படையான சட்டங்கள் குறித்து விளக்கினார். தொடர்ந்து வழக்கறிஞர் ஜே. மேரி அண்ணா தயாவதி, ஒவ்வொரு பெண்ணும் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படை அரசியல் அமைப்பு சட்டம் மற்றும் கட்டுப்பாடுகள் குறித்து பேசினார்.

தொழில்நுட்ப அமர்வுகளில் புதுவை பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித்துறை பேராசிரியர் டாக்டர் எஸ் நளினி, குடும்ப வன்முறை மனித கடத்தல் மற்றும் மாற்றுத்திறனாளி பெண்களுக்கான அரசின் திட்டங்கள் போன்றவற்றை எடுத்துரைத்தார்.

கல்லூரியின் முதல்வர் முனைவர் கா. உதயசூரியன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஷர்மிளா தேவி மற்றும் அக்குழுவின் உறுப்பினர்களை பாராட்டினார்.

புதுவையில் வெற்றி பெற 508 தேங்காய் உடைத்து காங்கிரஸார் வழிபாடு

● புதுச்சேரி

இண்டியா கூட்டணியில் புதுச்சேரி மக்களவைத் தொகுதியில். காங்கிரஸ் வேட்பாளராக தற்போதைய எம்.பி வைத்திலிங்கம் போட்டியிடுகிறார். அவர் இண்டியா கூட்டணி கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்று ஆதரவு திரட்டி வருகிறார்.

இந்நிலையில் வைத்திலிங்கத்தின் ஆதரவாளர்கள் மற்றும் காங்கிரஸார் புதுச்சேரி மணக்குள விநாயகர் கோயிலுக்கு மூட்டை, மூட்டையாக தேங்காய்களை கொண்டு வந்தனர்.

கோயில் வாயிலில் சிதறு தேங்காய் உடைக்கும் இடத்தில் தொடர்ந்து தேங்காய்களை உடைக்கத்தொடங்கினர்.

கோயிலுக்கு வந்தோரும் கொட்டிக்கிடந்த தேங்காய்களை எடுத்து உடைத்தனர். மொத்தம் 508 தேங்காய்களை உடைத்து வழிபாடு செய்தனர்.

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில்

'அனந்தரா - 2024' கலை விழா தொடக்கம்

● திருச்சி

திருச்சி சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகத்தின் 2 நாள் 'அனந்தரா -2024' கலை விழா பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று கோலாகலமாக தொடங்கியது. விழாவுக்கு, தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழக வேந்தர் அ.சீனிவாசன் தலைமை வகித்தார்.

இணை வேந்தர் அனந்த லட்சுமி கதிரவன், தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் நீவாணி கதிரவன், நிர்மல் கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம் சார்பில் இதய நோய் நிபுணர் டாக்டர் செந்தில்குமார் நல்லுசாமி, கண் மருத்துவர் பாரதி பாவகரன் மற்றும் பேராசிரியர் டாக்டர் புரட்சிக்கொடி ஆகியோருக்கு 'மோட்டிவேஷனல் ஐகான்' என்ற விருது வழங்கப்பட்டது.

➡ திருச்சி சமயபுரம் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் நேற்று தொடங்கிய கலை விழாவில் பங்கேற்றோர்.

திரைப்பட இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ், நடிகை கல்யாணி பிரியதர்ஷன் ஆகியோர் கலந்துகொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

சென்னையைச் சேர்ந்த ஸ்டாக்கட்டோ பேண்டின் இன்னிசை கச்சேரி நடைபெற்றது.

இன்று(மார்ச் 23) நடைபெறும் 2-ம் நாள் விழாவில் நடிகர் சிவகார்த்திகேயன், நடிகை ஸ்ரீலீலா மற்றும் நடன இயக்குநர் பாபா பாஸ்கர் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். ●

வரி விளம்பரங்கள்

கல்வி

பயிற்சி வகுப்புகள்

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346

பொது

பொது அறிவிப்பு

ஆவணம் காணவில்லை

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் தாலுக்கா, காகுப்பம், எண்:112, பிடாரி அம்மன் கோவில் தெருவில், வசிக்கும், என்.ராஜசேகரன், த/பெ. நடராஜன் ஆகிய நான் எனக்கு பாத்தியமான, அய்யங்கோவில் பட்டு சர்வே எண்: 460/1A , ஆவண எண்: 1346/1982, அய்யங்கோவில் பட்டு சர்வே எண்கள்: 471/1 , ஆவண எண்: 1257/1997, அய்யங்கோவில் பட்டு சர்வே எண்:471/1 , ஆவண எண்: 1496/1988 ஆகிய சொத்துக்களின் அசல் பத்திரம் விழுப்புரம் திருவீக. தெரு பழச்சாறு கடை அருகே 18-03-2024 அன்று காணாமல் போய் விட்டது. இது தொடர்பாக ஆன்லைனில் காவல் துறையில் 21-03-2024 அன்று புகார் அளிக்கப்பட்டுள்ளது (CAR24132360) மேற்குறிப்பிட்ட பத்திரம் யாரேனும் கிடைக்கப் பெற்றிருந்தால், கீழ் கண்ட என்னுக்கு தகவல் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

99948-73941

ஆவணம் காணவில்லை

திண்டிவனம் - 604302, சென்றாய் கிராமம் போஸ்ட், மயிலம் ரோடு, நெ. 70 என்ற முகவரியில் வசிக்கும் லட்சுமி தேவி க/பெ. ராஜாராம் பிள்ளை ஆகிய நான் அசல் செட்டில்மெண்ட் ஆவண எண் 758/1982 கடந்த 27.02.2024 அன்று மதியம் 3.00 மணியளவில் மயிலத்தில் இருந்து எங்கள் வீட்டிற்கு சென்றபோது வழியில் அசல் ஆவணம் தவறிவிட்டது. இதனால் காவல் நிலையம் இணைத்தளம் வழியாக புகார் அளிக்கப்பட்டுள்ளேன் (CAL24091985) அசல் ஆவணம் கிடைக்கப் பெற்றால் மேலே குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9842333142

அண்ணாமலைநகர்

ராணி சீதை ஆச்சி பள்ளில் இலக்கிய மன்ற, விளையாட்டு விழா

● கடலூர்

அண்ணாமலைநகர் ராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளியில் 2023-24-ம் ஆண்டுக்கான இலக்கிய மன்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் பள்ளித் தலைமையாசிரியர் பேர்லின் வில்லியம்ஸ் தலைமையுரை ஆற்றினார். பள்ளிக்குழுச் செயலர் அருண் குமார் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற சிதம்பரம் அரிமா சங்கத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் சுவேதகுமார், அறக்கட்டளை சார்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கி மற்றும் சென்ற ஆண்டு 100 சதவீதம் தேர்ச்சி அளித்த ஆசிரியர்களை கவுரவித்து சிறப்புரை ஆற்றினார். மேலும் அவர்களுடன் பயின்ற முன்னாள் மாணவர்களும் இணைந்து பள்ளிக்கு நன்கொடையாக ரூ.30 ஆயிரம் ரொக்கமாக அளித்தனர்.

விழாவின் சிறப்பு அம்சமாக ராணி சீதை ஆச்சி மேல்நிலைப் பள்ளியில் 9, 10 மற்றும் 11 -ம் வகுப்பில் பயிலும் 15 மாணவர்களை தேர்வு செய்து சென்னை ஐஐடியில் 5 நாட்கள் நடைபெறவுள்ள விழிப்புணர்வு பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

விழாவில் முன்னாள் தலைமையாசிரியர் தர்பாரண்யன் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கி நன்கொடையாக ரூ.10 ஆயிரம் வழங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ஆசீர் இரவிச்சந்திரன், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து மாணவர்களை வாழ்த்தினார்.

➡ சிதம்பரம் ராணி சீதை ஆச்சி மேல்நிலைப்பள்ளில் இலக்கிய மன்ற ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசு வழங்கி கவுரவித்தனர்.

➡ சிதம்பரம் நகர காங்கிரஸ் சார்பில், மறைந்த பி.பி. கலியபெருமாளின் 5-ம் ஆண்டு நினைவு தின நிகழ்வில் முன்னாள் மாநில தலைவர் கே.எஸ்.அழகிரி, தமிழ்நாடு காங்கிரஸ் மாநில செயலாளர் பி.பி. கே. சித்தார்த்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சிதம்பரம் நகர காங்கிரஸ் சார்பில்

முன்னாள் எம்.பி கலியபெருமாள் 5 -ம் ஆண்டு நினைவஞ்சலி

● கடலூர்

கடலூர் முன்னாள் மக்களவை உறுப்பினர் மறைந்த பி.பி. கலியபெருமாளின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சிதம்பரம் நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இதற்கான ஏற்பாட்டை தமிழ்நாடு காங்கிரஸ் மாநில செயலாளர் பி.பி. கே. சித்தார்த்தன் செய்து, நிகழ்வுக்கு தலைமை தாங்கினார்.

மாநில முன்னாள் காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நகர காங்கிரஸ் கமிட்டி தலைவரும் நகர்மன்ற உறுப்பினருமான தில்லை ஆர்.மக்கின் வரவேற்றார். மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜெமினி எம்.என்.ராதா, மாவட்ட துணை தலைவர்கள் ராஜா. சம்பத்குமார், வட்டாரத் தலைவர்கள் சுந்தர்ராஜன், செழியன், நகர காங்கிரஸ் செயல் தலைவர் தில்லை கோ.குமார், மாவட்ட துணைத் தலைவர் ஆர் சம்மந்த மூர்த்தி, மாவட்டத் துணைத் தலைவர்கள் பி வெங்கடேசன் மாநில ஊடகப்பிரிவு பொதுச் செயலாளர் சிவசக்தி ராஜா, வேல்முருகன் மாவட்ட செயலாளர்கள் தில்லை செல்வி, இந்திரா தேவதாஸ், அஞ்சம்மாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.

மாவட்ட செயலாளர் ஆர்.வி சின்ராஜ் நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை-9

நாள்: 22.03.2024

செய்தித்தாள் அறிவிப்பு

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் **17.04.2020 ஆம் நாளிட்ட 471(L)/ W&M-II/2020** அறிவிக்கையின் வரையறைகளின்படி வழங்கப்பட்ட **5.76% தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன் 2024 நிலுவைத் தொகையானது 22.04.2024 அன்று 21.04.2024** ஆம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. யாதொரு மாநில அரசால், 1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், மேற்சொன்ன நாளினை விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டிருப்பின், அந்த மாநிலத்தின் தொகை செலுத்தும் அலுவலகங்களால், முந்தைய அலுவலகப்பணி நாளில் திருப்பிச்செலுத்தப்படும். 22.04.2024 ஆம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளிலுள்ள 24(2) மற்றும் 24(3)ஆம் துணை ஒழுங்குமுறை விதிகளின்படி, பொதுதுணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டு கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும். கடன் பத்திரங்களை பொறுத்தமட்டில், தொகை செலுத்தும் நோக்கத்திற்காக, நேர்விற்கேற்ப அசல் சந்தாதாரர் அல்லது இத்தகைய அரசு கடன் பத்திரங்களை வைத்திருப்பவர் வட்டித்தொகை செலுத்துவதற்காக முகப்பிடப்பட்டுள்ள/பதிவு செய்யப்பட்டுள்ள வங்கிக்கு அல்லது கருவூலத்திற்கு மற்றும் சார் கருவூலத்திற்கு அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைக்கு நேர்விற்கேற்ப அவர்களுடைய வங்கிக் கணக்கின் உரிய விவரங்களை அளிக்க வேண்டும்.

3. இருப்பினும், வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவு வைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, **5.76% தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன், 2024** தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், கீழேகுறிப்பிடப்பட்டுள்ளவாறு உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

"சான்றிதழுக்குரிய அசல் தொகை பெறப்பட்டது"

4. பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப் பெற விரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்பவேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 421 /வரைகலை/2024

விக்கிரவாண்டி அருகே

அரசு பேருந்தில் கஞ்சா கடத்திய 3 பேர் கைது

3.300 கிலோ பறிமுதல்

● விழுப்புரம்

சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் விக்கிரவாண்டி அருகே நேற்று மதுவிலக்கு அமல் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் இளங்கோவன் மேற்பார்வையில் காவல் ஆய்வாளர் மீனா தலைமையில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற அரசு பேருந்தை நிறுத்தி சோதனை செய்ததில், 3 பேரிடம் 3 கிலோ 300 கிராம் எடை கொண்ட கஞ்சா பொட்டலங்கள் வைத்திருந்தது தெரியவந்தது.

அவற்றை பறிமுதல் செய்து பேருந்தில் பயணம் செய்த 3 பேரிடம் விசாரணை நடத்தினர். இதில் அவர்கள் கள்ளகுறிச்சி மாவட்டம் தியாகதுருகத்தைச் சேர்ந்த ருதீஷ் (26), செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரியைச் சேர்ந்த தினேஷ் (27), கூடுவாஞ்சேரி குருகணேஷ் நகரைச் சேர்ந்த வசந்த் (21) என்பது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து 3 பேரையும் கைது செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கஞ்சாவின் மதிப்பு ரூ.33 ஆயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்புப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	18.03.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நான் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	46008646218700	1) M/s. ASR Stores, அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. செல்வராஜ் A, 2) திரு. செல்வராஜ் A, 3) திருமதி. வசந்தா	07-07-2021	07-02-2024	ரூ.27,71,318.02 (ரூபாய் இருபத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி ஒராயிரத்து முன்னூற்றி பதினெட்டு மற்றும் பைசா இரண்டு மட்டும்)	12.04.2024 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.14,49,000/- (ரூபாய் பதிநான்கு இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்)	ரூ.1,44,900/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	24.04.2024 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	23.04.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

சொத்தின் அட்டவணை: கடலூர் R.D., கடலூர் இணை 1, கடலூர் வட்டம், கடலூர் நகராட்சி எல்லைகள், மஞ்சகுப்பம் கிராமம், தனலட்சுமி நகர், வார்டு எண்.7, பழைய பிளாக் எண். 30, புதிய பிளாக் எண்.19, டி.எஸ்.எண். 1775, ஏக்கர் 1.12371 சதுர அடி, **அயிட்டம் எண்.1 :** ஏக்கர் 0.30 சென்ட் அளவுகள் கிழக்கு மேற்கு 49 அடி, தெற்கு வடக்கு 17 அடி அதாவது மொத்த பரப்பு 833 சதுர அடி அல்லது 77.4 சதுர மீட்டர் மற்றும் ஆர்.சி.சி. கட்டிடம் மற்றும் SC.No. PNR 1139 [002-004-1134] அசெஸ்மெண்ட் எண். 9487 உட்பட. **எல்லைகள் : கிழக்கே** காமராஜ் சைட், **மேற்கே** தெற்கு வடக்கு சாலை, **தெற்கே** ஜனகம் சைட் மற்றும் வீடு, **வடக்கே** 2வது அயிட்டம் பொது லேன். **அயிட்டம் எண்.2 :** மேற்குறிப்பிட்ட இடம் தெற்கு பக்கம் அயிட்டம் எண்.1 அளவுகள் கிழக்கு மேற்கு 49 அடி தெற்கு வடக்கு 3 அடி, மொத்தம் 148 சதுர அடி அல்லது 13.7 சதுர மீட்டர் பொது லேன் இதில் 73 1/2 சதுர அடி அல்லது 6.85 சதுர மீட்டர் பொது பாதை உபயோகம். **எல்லைகள் : கிழக்கே** காமராஜ் சைட், **மேற்கே** தெற்கு வடக்கு சாலை, **தெற்கே** அயிட்டம் எண்.1, **வடக்கே** கிருஷ்ணவேணி மற்றும் காமராஜ்